**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை:திருமதி.S.சப்னா, B.B.M., L.L.M.,**
நீதித்துறைநடுவர், பல்லடம்.
**2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் ஆடி திங்கள் 12 ஆம் நாள்
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.78/2022**
CNR No.TNTI11- 000744 2022

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
அவினாசிபாளையம், காவல் நிலையம்,
குற்ற எண்.228/2019. .... குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

1) ஜெகநாதன் (வயது 47),
த/பெ. பழனிச்சாமி,
கரட்டுபாளையம்,பெருந்தொழுவு,
திருப்பூர் மாவட்டம்.

2)பேபி (வயது 43),
த/பெ. ஜெகநாதன்,
கரட்டுபாளையம்,பெருந்தொழுவு,
திருப்பூர் மாவட்டம்.

3)சித்திக் (வயது 53),
த/பெ. இப்ராஹிம்,
கரட்டுபாளையம்,பெருந்தொழுவு,
திருப்பூர் மாவட்டம்.

4)மும்தாஜ் (எ) விஜயலட்சுமி (வயது 50),
த/பெ. சித்திக்,
கரட்டுபாளையம்,பெருந்தொழுவு,
திருப்பூர் மாவட்டம். .....1 முதல் 4 எதிரிகள்

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.78/2022**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1(P.Dis.No.36/2021) படியும் விதி 106Criminal Rules of Practice -2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | 1) Jeganathan<br>2)Baby<br>3)Siddiq | Anticipatory Bail | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4) Mumthaj | | |
| (ii) | Date of filling of the complaint/final report in the court | Filing of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 23.05.2019 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் தேதியன்று 19.04.2022 தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of the accused under section 294(b),324,506(ii),323 of IPC as the case may be | 02.12.2023 | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | - | - | - |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1-Subramaniyam | 22.07.2026 | - |
| | | PW2- Seetha | 22.07.2026 | - |
| | | PW3- Karthick | 27.07.2026 | - |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 27.07.2026 |
| (viii) | Details of abscondance of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 27.07.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 திரு.எஸ். செந்தில்குமார், அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மகேஷ், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1)கடந்த 22.05.2020 ம் தேதி இரவு 11.30 மணிக்கு அவினாசிபாளையம் பகுதிக்குட்பட்ட பெருந்தொழுவு BSNL ஆபிஸ் பின்புறமுள்ள சாட்சி 1 சுப்பிரமணியம் வீட்டின் முன்பு வந்த 1ம் எதிரி சாட்சி1 சுப்பிரமணியத்தை பார்த்து ஏண்டா தாயோழி உன் மகன தான் வேணாம்னு என் மக கேசு போட்டிருக்கா அதுக்கப்புறம் ஏண்டா

உன் மகன் என் மகளுக்குபோன் பன்றான் என்று பொது இடத்தில் கெட்ட வார்த்தை பேசி சாட்சி 1 சுப்பிரமணி என்பவரை அவமானப்படுத்தியும், 1ம் எதிரி வாதியை கைகளால் முதுகில் குத்தி தரையில் இழுத்தும் அதன்பின்பு 2ம் எதிரி சாட்சி 2 சீதாவின் தலை முடியை பிடித்து தள்ளியும், 3ம் எதிரி சாட்சி 2 ஐ கைகளால் தாக்கியும் 4ம் எதிரி சாட்சி 2 சீதாவை காலால் எட்டி உதைத்தும், 1ம் எதிரி சாட்சி 1 சுப்பிரமணியத்தை மரக்கட்டையால் வலது கையில் தாக்கியும், எதிரிகள் சாட்சி 1 மற்றும் சாட்சி 2 சீதாவை பார்த்து இன்னைக்கு தப்பிச்சிட்டீங்க என்னைக்கு இருந்தாலும் உங்கள கொல்லாம இருக்கமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324,506(ii) இதசவின் கீழ் அவினாசிபாளையம், காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் எதிரிகளுக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>குற்றச்சாட்டின் சாராம்சத்தையும் குற்றச்சாட்டினையும் விவரித்தல்:</u>**

3)எதிரிகளுக்கு போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் 1ம்எதிரி மீது இதச பிரிவுகள்294(b),323,324,506(ii)ன் கீழும் 2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 323,506(ii)ன் கீழ் குற்றச் சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டு பற்றி, விளக்கிகூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தையும், குற்றச் சாட்டினையும் மறுத்து கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப் பட்டது.

4)அதன்படி, அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரை பட்டியலில் இடப் பட்டு, எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் வகையில், அ.சா.1 முதல் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப் பட்டுள்ளது.

**<u>5)அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

இவ்வழக்கானது திருப்பூர் பெருந்தொழுவு கிராமம், 2/34 BSNL ஆபிஸ் பின்புறத்தில் குடியிருந்து வரும் சுப்பிரமணியம் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 புகார் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான் மேலே கண்ட விலாசத்தில் அவரது குடியிருந்து கொண்டு கூலி வேலைக்கு சென்று வருவதாகவும் அவரது மனைவி பெயர் சரஸ்வதி அவர்களுக்கு சுரேஷ்பாபு, ஆனந்த் என்ற இருமகன்களும் சீதா என்ற மகளும் உள்ளதாகவும் இதில் சீதாவை தங்கள் உறவினருக்கு திருமணம் செய்து கொடுத்து கரட்டுபுதூர் கிராமத்தில் வசித்து வருவதாகவும் பெரியமகன் சுரேஷ்பாபு கரட்டுபுதூரை சேர்ந்த ஜெகன்நாதன் என்பவரின் மகளான மோகனப்பிரியா என்பவரை கடந்த 2 வருடங்களுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டதாகவும் அவர்களது இளையமகன் ஆனந்த் தங்களுடன் வசித்து வருவதாகவும் சுரேஷ்பாபு காதல் திருமணம் செய்த பின் தனிக்குடித்தனம் இருந்து வந்த நிலையில் அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்திற்கு மனு செய்துள்ளதாகவும் இந்நிலையில் கடந்த 22.05.2019 ம் தேதி இரவு 11.30 மணிக்கு அவர்களது வீட்டின் மெயின் கேட்டினை பூட்டிவிட்டு வீட்டில் இருந்தபோது அவர்கள் வீட்டின் மெயின் கேட்டருகே வந்த மோகனபிரியாவின் தந்தை அவரது மகன் சுரேஷ்பாபுவை வெளியே வரச்சொல்லி சத்தம் போட்டதாகவும் சத்தம் கேட்டு வெளியே வந்த அ.சா.1 கேட்டிற்கு வெளியே நின்றிருந்த ஜெகநாதன் மற்றும் அவரடன் வந்த அவரது மனைவி பேபி அவரது மைத்துனர் சித்திக் அக்காள் மும்தாஜ்(எ) விஜயலட்சுமி மற்றும் அவர்களுடன் வந்தவர்களை பார்த்து என்ன விசயமாக வந்துள்ளீர்கள் ஏன் இப்படி சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு ஜெகநாதன் அ.சா.1 ஐ பார்த்து ஏண்டா தாயோழி உன் மகனதான் வேணாம்னு என் பொண்ணு கேசு போட்டிருக்கா அதுக்கப்புறம் ஏண்டா உன் மகன் என் மகளுக்கு போன் பண்றான் என்று கெட்ட வார்தையால் திட்டியதாகவும் அதை கேட்ட அ.சா.1 அவரது மகன் போன் எல்லாம் பேசவில்லை இருந்தாலும் இரவு நேரமாகிவிட்டது காலையில பேசிக்கலாம் போங்க என்று சொன்னதற்கு ஜெகநாதன் அ.சா.1 யிடம் காலை என்னடா பேசறது என்று சொல்லி கேட்டை திறந்து அ.சா.1 வெளியே இழுத்து

1ம் எதிரி கைகளால் அவரது முதுகில் ஓங்கி குத்தியதாகவும் அதன்பின்பு அ.சா1 ஐ தரையில் இழுத்ததில் அ.சா.1 க்கு ரத்த காயம் ஏற்பட்டது அதன்பின்னர் வீட்டிலிருந்து அவரது மனைவி சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்து விட்டு அவரது மகனுக்கு போன் செய்ததாகவும் கொஞ்ச நேரத்திலேயே அவரது மகனும் மருமகன் சங்கரும் வந்து அவரது அப்பாவை ஏன் அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு ஜெகநாதன் மனைவி பேபி என் மகனின் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளியபோது உடனிருந்தி சித்திக் அ.சா.1ன் மகனை அவரது கைகளால் தாக்கியும் அதில் அவரது மகனுக்கு மொக்கை அடிபட்டது அ.சா.1 அவரது மகனை அடிக்காதீங்க என்று சத்தம்போட்டபோது ஜெகநாதன் அங்கிருந்த மரக்கட்டையை எடுத்து அ.சா.1 ஓங்கி வலது கையில் அடித்ததில் அ.சா.1 க்கு ரத்த காயம் ஏற்பட்டது அப்போது உடனிருந்த ஜெகநாதனின் அக்கா மும்தாஜ் (எ) விஜயலட்சுமி அவரது மகனை காலால் எட்டி உதைத்ததாகவும் நாங்கள் அடி தாங்க முடியாமல் சத்தம் போட்டதை கேட்டு பக்கத்து வீட்டுகாரர்கள் வரவே ஜெகநாதன் மற்றும் அவரது மனைவி பேபி அக்கா மும்தாஜ் (எ) விஜயலட்சுமி அவரது கணவர் சித்திக் ஆகியோர் அ.சா.1 ஐயும் அவரது மகனையும் பார்த்து இன்னைக்கு தப்பிச்சீட்டிங்க என்னைக்கு இருந்தாலும் உங்கள கொல்லாமல் இருக்கமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றதாகவும் அதன்பின்பு அ.சா.1ம் அவரது மகள் சீதாவும் அந்த வழியாக வந்த ஒரு போக்கு வண்டியில் அவரது மருமகன் துணையுடன் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைக்கு சேர்ந்து உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது அ.சா.1 ஐ விசாரிக்க 23.05.2019 ம் தேதி வந்த அவினாசிபாளையம் போலீசாரிடம் நடந்த சம்பவத்தினை பற்றி சொல்லியும் அ.சா.1 தாக்கி கொலைமிரட்டல் விடுத்து சென்றவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பவம் பற்றியும் தனக்கு ஏற்பட்ட காயம் பற்றி கூறும் சாட்சியாக அ.சா.2 சீதா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

6)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 கார்த்திக், உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் கையெழுத்தும் கையொப்பமும் தனக்கு நன்கு பரிட்சயம் வழக்கு கோப்பு ஆவணங்கைள பார்வையிட்டு சாட்சியம் அளிப்பதாகவும் கடந்த 23.05.2019 ஆம் தேதி அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலர் 916 பால

சுப்பிரமணியம் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது பல்லடம் அரசு மருத்துவ மனையில் இருந்து பெற்ற இன்டிமேசனை பெற்று பல்லடம் அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கருப்பு சாமி சுப்பிரமணியம் என்பவரிடம் அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பெற்று வந்து அவிநாசிபாளையம் காவல் நிலைய குற்ற எண் 228/2019 சட்டப்பரிவு 294(b),324,506(ii) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் வழக்கினை அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 23.05.2019 ஆம் தேதி 17.30 மணிக்கு சம்பவ இடத்தை வாதி அடையாளம் காட்ட சாட்சிகள் பரமேஸ்வரன் மற்றும் கௌதம் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைப்படம் தயார் செய்ததாகவும் பின்னர் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய சுமார் 80 செ.மீ நீள மரக்கட்டை ஒன்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசரில் கைபற்றியதாகவும் சாட்சிகள் சுப்பிரமணியம், சீதா, சரஸ்வதி, பரமேஸ்வரன், கௌதம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் எதிரிகள் ஜெகநாதன், பேபி, சித்திக், மும்தாஜ் ஆகியோர் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தின் முன்பிணை பெற்று பிணையில் சென்றதாகவும் இவ்வழக்கில் காயம் பட்ட சுப்பிரமணியம் மற்றும் சீதா ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரமேஷ் அவர்களை விசாரித்து அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 விபத்து பதிவேடுடன் கூடிய காயச் சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 12.06.2019 ஆம் தேதி சட்டப்பிரிவுகள் 294(b),324,506(ii) இதசவின் குற்றப் பத்திரக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

**<u>கு.வி.மு.சபிரிவு 313(i)(b)ன் கீழ் எதிரிகளிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில் :</u>**

7)அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.313(i)(b)பிரிவின் கீழ் வினவியபோது எதிரிகள் சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப் பட்டது.

**<u>எதிரிகள் தரப்பு வாதம் :</u>**

8)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரிகள் மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 240ன் கீழ் வினவியபோது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார்கள். மேலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்படும்போது, புகார்தாரரும் எதிரிகளும் சமரசம் பேசி சமாதானமாக சென்று வழக்கை முடித்துக் கொள்ள மனுஎண்.02/2026 22.07.2026ம் தேதி தாக்கல் செய்துள்ளார். அம்மனுவானது அன்றே இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் எதிரிகளிடம் வினவியபோது, சாட்சிகள் அனைத்தும் பொய் சாட்சிகள் என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை அரசுத்தரப்பில் தகுநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

**<u>9) தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை :</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் போதுமான சாட்சிகள் கொண்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது? இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சுப்பிரமணியம் அவரது சாட்சியத்தில் சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது மகன் சுரேஷ் பாபு, மோகனப்பிரியாவை காதல் திருமணம் செய்துக் கொண்டதாகவும் அவர்கள் தனி குடுத்தினம் செய்து வந்ததாகவும் அவர்கள் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது அது சம்மந்தமாக சத்தம் போட்டார்கள் அதன் பின் இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது அப்போது அ.சா.1ன் மகள் சீதா உடன் இருந்ததாகவும் கும்பலில் ஏற்பட்ட தள்ளு முள்ளுவில் அ.சா.1 கீழே விழுந்து விட்டதாகவும் அதில் அ.சா.1க்கு வலது கையில் காயம் ஏற்பட்டது என் மகள் சீதாவிற்கும் காயம் ஏற்பட்டது என்றும்அ.சா.1 யும் அவரது மகளையும் பல்லடம் அரசு மருத்துவ மனையில் சிகிச்சையில் சேர்த்தபோது அவிநாசிபாளையம் போலீசார் வந்த கையொப்பம் கேட்டார்கள் அ.சா.1 கைரேகை வைத்ததாகவும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை தன்னுடையதுதான் என்றும்

அந்த கைரேகை மட்டும் அ.த.சா–ஆ.1 என்றும் சமாதான மனுவில் உள்ள கைரேகை தன்னுடையதுதான் என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

10)இவ்வழக்கு சம்பவம் பற்றியும் தனக்கு ஏற்பட்ட காயம் பற்றி கூறும் சாட்சியாக அ.சா.2 சீதா அவரது சாட்சியத்தில் அ.சா.1 அவரது அப்பா என்றும் எதிரிகளை தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அவரது அண்ணன் சுரேஷ் பாபு, மோகனப் பிரியாவை காதல் திருமணம் செய்துக் கொண்டதாகவும் அவர்கள் தனி குடித்தனம் நடத்தி வந்தபோது இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும் அது சம்மந்தமாக சத்தம் போட்டார்கள் அதன் பின் இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது என்றும் அப்போது அ.சா.2 ன் அப்பா சுப்பிரமணியம் உடன் இருந்ததாகவும் கும்பலில் ஏற்பட்ட தள்ளு முள்ளுவில் அ.சா.2 கீழே விழுந்துவிட்டதாகவும் அதில் அ.சா.2 ன் அப்பாவிற்கு வலது கையில் காயம் ஏற்பட்டது அ.சா.2 க்கு காயம் ஏற்பட்டது என்றும் அ.சா.2 ன் அப்பாவையும் அ.சா.2 யும் பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர்.

11)இவ்வழக்கு சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 போலீசார் விசாரணையின் போது, புகார் வாக்குமூலத்திலும், அ.சா.2 போலீசார் விசாரணையின்போது எதிரியின் குற்ற செயல் குறித்து சாட்சியம் அளித்து விட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியத்தின் அரசு தரப்பு வழக்கை சாட்சியங்கள் மூலம் உறுதிப் படுத்தப் படவில்லை.

12)இதுகுறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் Madan Mohan Abbot vs. State of Punjab reported in (2008) 4 SCC 582 என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5 ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும் எதிரியும் சமாதானமாக செல்லும் போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு:

"....We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result

in favour of the prosecution is a luxury which the Courts, grossly over burdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."

13)இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சினை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்பந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசு தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்டமுடியாத நிலையில் புலன் விசாரணை அதிகாரி தவிர நிகர்நிலை புகார்தாரர் சாட்சி உள்ளிட்ட ஏனைய தனி நபர் சாட்சிகள் அரசுத் தரப்பு வழக்கை ஆதரிக்காமல் முரண்பட்டு பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதையும் காண முடிகிறது. இந்நிலையில் முன் தீர்ப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை சமாதானத்தினையும் பரிசீலனைக்கு கவனத்தில் எடுத்துக் கொண்டு இவ்வழக்கை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும் சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன் படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14)மேலும் அரசுத்தரப்பில் முன்னிடப்பட்டுள்ள இவ்வழக்கானது எதிரிகளின் பெயரை குறிப்பிட்டும், வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எழுந்துள்ள நிலையில், அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுப்பட்டார்கள் என்று எந்தவித சாட்சியமும் எதிரிகளுக்கு எதிராக இடம்பெறாத நிலையில் எதிரிகள் மீதான குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15)வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து, இவ்வழக்கின் எதிரிகளை குற்றத்தோடு இணைக்கவோ, குற்றவாளிகள் என முடிவு செய்யவோ இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரிகள் மீது சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் குற்றம் நிரூபிக்கப் படாததால் எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை அளித்து அவர்களை விடுதலை செய்யலாம் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16) முடிவில், 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323,324, 506(II)ன் கீழும் 2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 323, 506(ii)ன் கீழான குற்றச் சாட்டிலிருந்து குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குவிமுச 248(1) பிரிவின் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

17)இவ்வழக்கில் சொத்தான அ.சா.பொ.1 சுமார் 80 செ.மீ நீளமுள்ள மரக் கட்டை ஒன்று இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இந்நீதிமன்ற பி.ஆர் எண்.261/2022 ஆக பி.ஆர் செய்யப்பட்டு நீதிமன்ற பொறுப்பில் உள்ளதை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் பயனற்றது என கருதி அழிக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ஆம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.07.28 14:26:32 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 22.07.2026 | திரு.சுப்பிரமணியம் த/பெ. கருப்புசாமி – புகார்தாரர் |
| அ.சா.2 | 22.07.2026 | திருமதி.சீதா த/பெ. சுப்பிரமணியம் – சம்பவத்தின்போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.3 | 27.07.2026 | திரு.கார்த்திக், உதவி ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 23.05.2019 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை |
| அ.சா.ஆ.2/அ.சா.3 | 23.05.2019 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 /அ.சா.3 | 23.05.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4/அ.சா.3 | 23.05.2019 | பார்வை மகசர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5/அ.சா.3 | 23.05.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6/அ.சா.3 | 23.05.2019 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7/அ.சா.3 | 23.05.2019 | சுப்பிரமணி என்பவரின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.8/அ.சா.3 | 23.05.2019 | சீதா என்பவரின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9/அ.சா.3 | 23.05.2019 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள் :**

அ.சா.பொ.1 – சுமார் 80 செ.மீ நீளமுள்ள மரக் கட்டை ஒன்று

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.07.28 14:26:36 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

குறிப்பு :

1) எதிரிகள் ஆஜர் மற்றும் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.

3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4)வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

5)நகல் மாண்புமிகு திருப்பூர் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப் படுகிறது.